

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இடிந்தகரை மீனவ கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் பஹ்ரைன் நாட்டிலிருந்து தாயகம் திரும்பினார்கள். அவர்களை திருவனந்தபுரம் விமான நிலையத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ் ஆகியோர் 18.12.2024 அன்று பொன்னாடை போற்றி வரவேற்று இனிப்புகளை வழங்கி சொந்த ஊருக்கு வழியனுப்பி வைத்தார்கள். உடன் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் குடும்பத்தார்கள் உள்ளார்கள்.



சென்னை, கோட்டூர்புரம், நேற்று (23.12.2024) அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித் துறை சார்பில் சிங்கப்பூர் நாட்டிற்கு 5 நாள் பயணமாக கல்விச் சுற்றுலா செல்லும் 42 மாணவர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது பள்ளிக் கல்வி துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் – 5 நாள் பயணமாக

# 42 மாணவர்கள் சிங்கப்பூர் பயணம்!

## கல்விச் சுற்றுலா செல்கின்றனர்!

சென்னை, டிச. 24 - பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் 42 மாணவர்கள் 5 நாள் பயணமாக சிங்கப்பூர் நாட்டிற்கு கல்விச் சுற்றுலா செல்கிறார்கள். 23.12.2024 முதல் 27.12.2024 வரை 5 நாட்கள் சிங்கப்பூர் நாட்டில் முக்கிய இடங்களைப் பார்வையிடுவார்கள்.

2022-2023 ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் பள்ளி அள வில் கல்வி மற்றும் இணை செயல்பாடுகளான மன்ற செயல்பாடுகள், நூல் வாசிப்பு, நுண் கலைகள், விளையாட்டு மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மாணவர்கள் உலக அளவிலும் தேசிய அல்லது மாநில அளவிலும் புகழ் பெற்ற இடங்களுக்கு கல்வி சுற்றுலா அழைத்து செல்லப்படுவர் என அறிவிப்பு வெளியிட்டார்கள். அவ்வறிவிப்பிற்கு இணங்க 2022-2023 ஆம் கல்வி ஆண்டில் அரசு நடுநிலை, உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடைபெற்ற 4 மன்ற போட்டிகளில், ஒவ்வொரு மன்றத்திற்கும் 25 மாணவர்கள் வீதம் வெற்றியாளர்களாக தேர்ந்தேடுக்கப்பட்டனர்.

இம்மாணவர்களை பாராட்டும் வகையிலும் மற்றும் அவர்கள் அறிவை விரிவுபடுத்தும் நோக்கத்திலும், தமிழக அரசால் 3 கோடி செலவில் வெளிநாட்டு கல்விச் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். ஒவ்வொரு மன்ற வெற்றியாளர்களும் மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் தென்கொரியாவுக்குச் சென்று தங்கள் பயணங்களிலிருந்து விரிவான அனுபவத்தையும் அறிவையும் பெற்றனர். நுண்கலை மற்றும் விளையாட்டில் சிறந்து விளங்கிய மாணவர்களும் அவ்வாறே அழைத்து செல்லப்பட்டனர்.

மன்ற வாரியாக வெளிநாடுகளுக்கு அழைத்து செல்லப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு,

மன்றங்கள் - மாணவர்களின் எண்ணிக்கை - கல்வி சுற்றுலா சென்ற நாடு

இலக்கிய மன்றம் - 25 - சிங்கப்பூர், வினாடி வினா மன்றம்-25-தென் கொரியா, வானவில் மன்றம் - 25 - தென் கொரியா, சிறார் திரைப்படம் மன்றம் - 24 - தென் கொரியா, கலைத் திருவிழா- 21 -மலேசியா, விளையாட்டு - 22 - ஜப்பான்,

2023-2024 ஆம் ஆண்டுகளுக்கான அரசு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 9 வகுப்பு மாணவர்களுக்கு பள்ளி அளவில் மன்ற செயல்பாடுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்ட அளவிலான மன்றப் போட்டிகள் 14.02.2024 முதல் 16.02.2024 வரை நடத்தப்பட்டது, மாநில அளவிலான மன்றப் போட்டிகள் 27.02.2024 முதல் 14.03.2024 வரை நடத்தப்பட்டன. முதற்கட்டமாக மாநில அளவில் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களில் 20 மாணவ/மாணவியர்கள், தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியை ஒருவரும் மற்றும் அலுவலர் ஒருவரும் 22.08.2024 முதல் 27.08.2024 வரை ஹாங்காங் நாட்டிற்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

தற்போது 23.12.2024 அன்று முதல் 27.12.2024 வரை 42 மாணவர்கள், 3 அலுவலர்கள் மற்றும் தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் ஒருவரும் சிங்கப்பூர் நாட்டிற்கு அழைத்து செல்லப்படுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து பள்ளிக்கல்வித் துறை, பொது நூலக இயக்ககம் சார்பில் கன்னியாகுமரியில் 01.01.2000 அன்று திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆகும் நிலையில், இதன் வெள்ளி விழாக் கொண்டாட்டம் 23.12.2024 முதல் 31.12.2024 வரை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறுகிறது. அய்யன் திருவள்ளுவர் புகைப்படத்திற்கு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மலர் தூவி மரியாதை செலுத்தினார். "உலக அளவில் செயல் திறன் மிக்க திருக்குறள் வளர்ச்சித் திட்டங்களும் பரப்புரையாளர்களும்" என்ற புத்தகத்தையும் வெளியிட்டார்.

அதன் பின்னர் பள்ளி மாணவர்களின் கைவண்ணத்தில் குறள் ஓவியங்கள், பேரறிவுச் சிலை (Statue of Wisdom) - சுயமிக்கான பகுதி, அய்யன் திருவள்ளுவர் திருவுருவப் படம், திருக்குறள் மூலமும், உரையும், கலைஞரின் குறளோவியம், திருக்குறள் தொடர்பான நூல்கள், உலக மொழிகளில் திருக்குறள், தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் திருக்குறளின் புதிய வெளியீடுகள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டிருந்ததை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் பார்வையிட்டார். திருக்குறள் கருத்தரங்கம், பரிசு போட்டிகளான போட்டி, திருக்குறள் ஒப்பித்தல், வினாடி வினா ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

கல்வி மாநிலப் பட்டியலுக்கு வர வேண்டும் இந்திய ஒன்றியத்திற்கு முன் மாதிரியாக கல்வியில் வளர்ச்சி அடைந்துள்ள தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிலுவைத் தொகையை தராமல் ஒன்றிய அரசு வஞ்சித்துக் கொண்டிருக்கிறது. பல்வேறு வகைகளிலும் கல்வியில் சாதனை புரியும் நமது மாணவச் செல்வங்களையும், ஆசிரியப் பெருமக்களையும் ஒன்றிய அரசு ஏமாற்றி வருகின்றது.

கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும். எங்கள் பிள்ளைகளையும் ஆசிரியப் பெருமக்களையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். எங்கள் மாணவர்களுக்கு என்ன மாதிரியான அறிவுசார் பயிற்சிகள் வழங்க வேண்டும் என்பதை நாங்கள் முடிவு எடுத்துக் கொள்கிறோம்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2000ம் ஆண்டு அய்யன் திருவள்ளுவர் சிலை கன்னியாகுமரியில் நிறுவப்பட்டு 25வது ஆண்டை முன்னிட்டு வெள்ளி விழாக் கொண்டாட்டம் நடைபெற்று வருகிறது. அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட நூலகங்களில் பேச்சுப் போட்டி, திருக் குறள் ஒப்புவித்தல் போட்டி, வினாடி வினா போட்டிகள் நடைபெறுகின்றது. உலகப் பொதுமறையான அய்யன் வள்ளுவரை கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

இன்று 42 மாணவர்கள் 5 நாள் பயணமாக சிங்கப்பூர் நாட்டிற்கு கல்விச் சுற்றுலா செல்கிறார்கள். 23.12.2024 முதல் 27.12.2024 வரை 5 நாட்கள் சிங்கப்பூர் நாட்டில் முக்கிய இடங்களைப் பார்வையிடுவார்கள். கல்வியில் பின்தங்கிய மாவட்டத்தைச் சார்ந்த மாணவர்களும் தற்போது சாதனைகளைப் புரிந்து வருகிறார்கள். குறிப்பாக கிருஷ்ணகிரி, திருவண்ணா மலை, விழுப்புரம், கடலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்களும் இக்கல்விச் சுற்றுலாவில் இடம்பெறுகிறார்கள். மாணவர்களுக்கு இந்நிகழ்வு மேலும் ஊக்கத்தை தருகிறது. மாணவர்கள் விமானத்தில் சிங்கப்பூர் அழைத்துச் செல்லப்பட்டு பல்வேறு சுற்றுலா இடங்களை பார்வையிட உள்ளனர்.

தமிழ்நாட்டு மாணவர்கள் ஐ.ஐ.டி, உயர்தர சட்டக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகளில் படித்து வருகிறார்கள். பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது ரோபோட்டிக், சென்சேரியன் பார்க், அமைக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறோம். உயர்தரமான கல்வியை தமிழ்நாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒன்றிய அரசு தற்போது நிதி ஒதுக்கீட்டைக் குறைத்தால் தமிழ்நாட்டு மாணவர்கள் நலன் பாதிக்கப்படும். துணை முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசு நாம் செலுத்தும் ஒரு ரூபாய்க்கு 29 பைசாதான் திருப்பி அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார். இதனால் தான் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். எல்லோரும் பாராட்டும் வகையில் கல்வித் துறை செயல்பட்டு வருகிறது என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தலைவர் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு திரு. மனுஷ்யபுத்திரன், இணை இயக்குநர் திருமதி. சசிகலா, இணை இயக்குநர் பொது நூலக இயக்ககம் எஸ். இளங்கோ சந்திரகுமார், பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் முத்துக்குமார், முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர் அண்ணா நூற்றாண்டு நூலகம் முனைவர் எஸ். காமாட்சி மற்றும் பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### பக்ரைன் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய

# மீனவர்கள் - முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி தெரிவித்தனர்!

## திருவனந்தபுரத்தில் மீனவர்களை மு.அப்பாவு – செ.ராபர்ட புரூஸ் எம்.பி. வரவேற்றனர்!

நெல்லை, டிச. 24 - பக்ரைன் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மீனவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் இடிந்தகரை மீனவர் கிராமத்தைச் சேர்ந்த மீன வர்கள் பக்ரைன் நாட்டிலிருந்து தாயகம் திரும்பினார்கள்.அவர்களை திருவனந்தபுரம் விமான நிலையத்தில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புருஸ் ஆகியோர் வரவேற்று இனிப்பு வழங்கி சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

நெல்லை மாவட்டம், இராதாபுரம் வட்டம் இடிந்தகரை மீனவ கிராமத்தைச் சேர்ந்த 28 மீனவர்கள் ஈரான் நாட்டில் மீன் பிடி தொழிலுக்காக சென்று அந்நாட்டில் மீன் பிடி தொழிலில் செய்து வந்தனர் . மீன்பிடி தொழில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது பக்ரைன் நாட்டு கடலோர காவல் படையினரால் 11.9.2024 அன்று கைது செய்யப்பட்டு பக்ரைன் நாட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்ட 28மீனவர்களுக்கு பக்ரைன் நாட்டு அரசு 6 மாத காலம் சிறைத் தண்டனை விதித்தது.

இது தொடர்பாக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்ததைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் வெளியுறவு துறை அமைச்சர் அவர்களுக்கு மீனவர்களை விடுதலை செய்யுமாறு கடிதம் வாயிலாக தெரிவித்தார்கள்.அரசின் பல்வேறு நடவடிக்கையால் மீனவர்களின் சிறைத்தண்டனை காலம் 6 மாதத்தில் இருந்து 3 மாதங்களாக குறைக்கப்பட்டது.

அதன்படி சிறையில் அடைக்கப்பட்ட இடிந்தகரை மீனவ கிராமத்தை சேர்ந்த 28 மீனவர் களுக்கு 3 மாத கால சிறை தண்டனை முடிவுற்று பக்ரைன் நாட்டு சிறையிலிருந்து விடுவி க்கப்பட்டு 18.12.2024 அன்று விமானம் மூலம் திருவ னந்தபுரம் விமான நிலை யத்திற்கு வந்தடைந்த மீனவர்களை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வரவேற்று சொந்த ஊருக்கு வழி அனுப்பி வைத்தார். தமிழ்நாடு அரசின் இத்தகைய பெரும் முயற்சியால் 28 மீனவர்களும் அவர்கள் சொந்த ஊரான இடிந்தகரை வந்து அடைந்துள்ளனர்.

தாயகம் திரும்பிய மீனவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கையில் கூறியது:-

ஈரான் நாட்டில் மீன்பிடித் தொழிலுக்காக சென்று அந்நாட்டில் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது பக்ரைன் நாட்டு கடலோர காவல் படையினர் சிறையில் அடைத்தனர் நாங்கள் சிறையில் இருக்கும் போது எங்களின் குடும்பத்திற்கு தமிழ்நாடு அரசு பல உதவிகளை செய்துள்ளது. எங்களை விடுதலை செய்வதற்காக முதலமைச்சர். ஐயா அவர்கள் ஒன்றிய அரசின் மூலம் ஒன்றிய அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியதின் அடிப்படையில் எங்களின் சிறை தண்டனை மூன்று மாதமாக குறைந்தது.இப்போது தாயகம் திரும்பி உள்ளோம் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.நாங்கள் சிறையில் இருந்து விரைவாக வெளி வருவதற்கு காரணமாக இருந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஐயா அவர்களுக்கும் எங்கள் தொகுதி எம்.எல்.ஏ.ஆசிரியர் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களுக்கும்,

நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் அவர்களுக்கும் எங்களின் குடும்பத்தின் சார்பாகவும் மீனவர்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர்கள் மீன் பிடிக்கும் போது பக்ரைன் நாட்டு கடலோர காவல் படையினர் சிறையில் அடைத்து 6 மாத கால தண்டனை விதிக்கப் பட்டது.இச்செய்தியை அறிந்த தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களை நேரில் சந்தித்து மீனவர்களின் நிலைமையை எடுத்துக் கூறியதன் அடிப்படையில் முதலமைச்சர் ஐயா அவர்கள் உடனடியாக வெளியுறவு துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியதின் தொடர்பாக உடனடியாக 6 மாத கால சிறைத் தண்டனை 3 மாத காலமாக குறைக்கப்பட்டது.எங்களது கணவர் சிறையில் இருக்கும் போது

எங்களது குடும்ப த்தினருக்கு தமிழ்நாடு பல்வேறு உதவிகளை செய்துள்ளார்கள் சிறையில் இருந்து வெளியேறுவதற்கு உறுதுணையாக இருந்த முதலமைச்சர் ஐயா அவர்களுக்கும், சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எங்களின் குடும்பத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டம்

## காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கடலூர் கிழக்கு மாவட்டம், காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பி.இராமலிங்கம் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, டி. ஜெயப்பாண்டியன் (பட்டிவாசல் தெரு, முட்டம் அஞ்சல், காட்டுமன்னார்கோவில் வட்டம், கடலூர் மாவட்டம்.) அவர்கள் காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.12.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

## தஞ்சை தெற்கு மாவட்டம் - மாவட்ட பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் - தேர்தல் முடிவு!

### தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், தஞ்சை தெற்கு மாவட்டம், பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.எச்.அஸ்லம் அவர்கள் அதிராம்பட்டினம் மேற்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்; தஞ்சை தெற்கு மாவட்டம், மாவட்ட பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, டிசம்பர் 22 (ஞாயிற்றுக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

தஞ்சை தெற்கு மாவட்டம், மாவட்டப் பொருளாளர் பொறுப்புக்கு எஸ்.கே. செந்தில்குமார் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

தஞ்சை தெற்கு மாவட்டம், மாவட்டப் பொருளாளராக, எஸ்.கே. செந்தில்குமார், 11, அரசு மருத்துவமனை சாலை, பட்டுக்கோட்டை - 614601. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.12.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.



வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் வட்டம்துருவம் கிராமத்தில் சிறுத்தை தாக்கி மறைவெய்திய இளம்பெண் குடும்பத்தினரிடம் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகையாக ரூ.1லட்சத்திற்கான ஆணையினை வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம் கதிர் ஆனந்த் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி கே.வி.குப்பம் ஒன்றிய குழு தலைவர் லோ.ரவிச் ச்திரன், கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை ஏ.ஆர்.சந்திரன்

### டிசம்பர் 24 (2008)



பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது தீவிரப் பற்றுக் கொண்டு கழகப் பணிகளில் ஈடுபட்டவர். கழக மாநாடுகள் அனைத்திலும் பங்கேற்றவர். மதுரை முத்துவுடன் சேர்ந்து கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்.

கழகம் தொடங்கிய காலத்தில் மதுரை வடக்கு மாசி வீதியில் "மறுமலர்ச்சி படிப்பகம்" என்ற படிப்பகத்தைத் தொடங்கி அதில் முரசொலி, நம்நாடு, திராவிட நாடு போன்ற ஏடுகளை வழங்கி கழகத் தோழர்களையெல்லாம் படிக்க வைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக நியமிக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களிடம் சிறந்த கூட்டுறவு வங்கி என்ற பாராட்டைப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.